# TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION

19-A, Rukmini Lakshmipathy Salai (Marshalls Road), Egmore, Chennai - 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378 / 2841 1379 Fax : ++044-2841 1377
e-mail : tnerc@nic.in Website : www.tnerc.gov.in


எண்.5/2013
நாள் 12–08–2013

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு, மின்நுகர்வோரிடமிருந்து பல்வேறு குறைபாடுகள் குறித்து அதிக எண்ணிக்கையில் கடிதங்கள் வருகின்றன. இந்தக் கடிதங்கள் தவறான மின்கட்டண கணக்கெடுப்பு, புதிய மின்னிணைப்பு வழங்குவதில் காலதாமதம், குறைபாடுடைய மின்னளவிகள், குறைபாடான மின்வழங்கல், மின்நுகர்வோர்களுக்கிடையிலான பிரச்சனைகள் போன்ற பல்வேறு குறைபாடுகளைப் பற்றி மின்நுகர்வோர்கள் அனுப்பும் கடிதங்கள் ஆகும். ஆனால், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இத்தகைய பொருள்கள் குறித்து நடவடிக்கை எடுக்க முடியாது. எனவே மின்நுகர்வோர் அத்தகைய முறையீடுகளை ஆணையத்திற்கு அனுப்ப வேண்டாம் எனவும் அத்தகைய மனுக்களை உங்கள் வட்டார மின்சார அலுவலகத்தில் உள்ள மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு (மி.கு.தீ.ம.) அனுப்பும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டம், மின்நுகர்வோர் அனைவருக்கும் தரமான மின்சாரம் வழங்கும் பொறுப்பை மின்பகிர்மான அமைப்பிற்கு (தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்) அளித்துள்ளது. இது தொடர்பான பிரச்சனைகளையும் முறையீடுகளையும் மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கு அனுப்பலாம். சட்டத்தின் 42 ஆம் பிரிவின்படி, மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளர் போன்ற அமைப்புகள் மின்நுகர்வோரின் குறைகளை, உரிய காலத்தில் திறம்படத் தீர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதேபோன்று மின்சாரச் சட்டமும் மின்பகிர்மான தரங்களின் செயல்பாட்டு ஒழுங்குமுறைவிதிகளும் மின்பகிர்மான உரிமம்தாரர், மின்நுகர்வோருக்கு திறமான மற்றும் திருப்திகரமான சேவைகளை வழங்குவதற்கான ஒருசில செயல்பாட்டுத் தரங்களை வகுத்துள்ளது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம் லிமிடெட்டிற்கு, புதிய மின்னிணைப்பு வழங்கல், குறைபாடுடைய மின்னளவிகளை மாற்றிவைத்தல், மின்வழங்கலில் ஏற்படும் தடையினை சரி செய்தல் ஆகியவற்றிற்காக செயல்பாட்டுத் தரத்தினை நிர்ணயித்துள்ளது.

TAMIL NADU ELECTRICITY REGULATORY COMMISSION
19-A, Rukmini Lakshmipathy Salai (Marshalls Road), Egmore, Chennai - 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378 / 2841 1379 Fax : ++044-2841 1377
e-mail : tnerc@nic.in Website : www.tnerc.gov.in



ஒவ்வொரு மின்வட்டத்திலும் (பெரும்பாலும் ஒரு மாவட்டத்தை உள்ளடக்கியது) சம்பந்தப்பட்ட மின்வட்டத்தின் மேற்பார்வைப் பொறியாளரைத் தலைவராகக் கொண்ட மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் செயற்பட்டு வருகிறது. இதில் இரண்டு அலுவல் சாராத உறுப்பினர்கள் மாவட்ட ஆட்சியாளரால் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம் லிமிடெட்டினால் செய்யப்படும் சேவைகள் தொடர்பான குறைகள் எவற்றிற்காகவும் மின்நுகர்வோர் சம்பந்தப்பட்ட மின்நுகர்வோருக்கான குறைதீர்மன்றத்தை அணுகலாம். அத்தகைய மனுவைப் பெற்றதற்கான ஒப்புகை அந்த மன்றத்தினால் ஏழு பணி நாட்களுக்குள் வழங்கப்படுதல் வேண்டும்.

மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் இரண்டு மாதங்களுக்குள் மனுக்கள்/முறையீடுகள் மீதான ஆணைகளைப் பிறப்பித்தல் வேண்டும். முறையீட்டாளர் மன்றத்தின் தீர்ப்பில் திருப்தியடையவில்லை என்றால் அல்லது முறையீட்டாளர், முறையீடு தாக்கல் செய்த நாளிலிருந்து 2 மாதங்களுக்குள் பதிலுரை எதனையும் பெறவில்லை என்றால், சென்னையிலுள்ள தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் அலுவலகத்தில் அமைந்துள்ள மின்குறை தீர்ப்பாளருக்கு (Electricity Ombudsman) மேல்முறையீடு செய்யலாம்.

பொதுத்தன்மை வாய்ந்த குறைகள் இருந்தாலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் அதிகாரவரம்பிற்குள் வந்தாலோ, அத்தகைய மனுக்கள் மின்குறைதீர்ப்பாளருக்கு நேரடியாக மின்நுகர்வோர் எவராலுமோ அல்லது மாநில அளவிலான மின்நுகர்வோர் சங்கத்தினாலோ கொண்டு வரப்படலாம்.

மின்நுகர்வோர் குறைதீர்மன்றம் குறித்த விவரங்கள், வெள்ளை மின்னளவி அட்டைகளிலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் லிமிடெட்டின் இணைய தளங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. எனவே பொதுமக்கள் மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் சேவைகளை முழுவதுமாகப் பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அத்தகைய மனுக்களை எங்கள் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு அனுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சி.குணசேகரன்
செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.